**இரத்தினபுரி மாநகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதி நகர முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி மாநகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 06 கைத்தொழிற்குரிய ரூபா 13,244,244 தொகை மூலதனமாக்கபட்டிருக்கவில்லை. | உரிய கைத்தொழில்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்ய குறித்துக் கொண்டதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளில் கிடைத்திருந்த முன்ஏற்பாட்டுக் கட்டணம் மற்றும் அனுமதியற்ற சேவைக் கட்டணம் ரூபா 9,723,276 வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்கீட்டு அவதானத்துடன் இணங்குவதாகவும், அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய கடையறை வாடகைக் கணக்கின் மீதி ரூபா 8,075,932 மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 7,694,821 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டினுள் சேகரிக்கப்படும் வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (உ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொனை | ஆண்டினுள் கொள்வனவு | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 4,832,778 ஆன நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்களை மூலதனமாக்க வேண்டும். | சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | நிதி நிலைமைக் கூற்றில் முன்செலுத்திய கணக்கு மீதி ரூபா 2,500,000 கூடுதலாக காட்ட்பபட்டிருந்தது. | ஆண்டினுள் செய்யப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன வருமானம் ரூபா 1,937,392 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய மூலதன வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக்கணக்கினூடாக செம்மையாக்க குறித்துக் கொண்டதாக அறிவிக்கிறேன். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய குத்தனை வருமானம் ரூபா 1,919,400 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | மானியப் பணம் ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதாக அறிவிக்கிறேன் |
| (ஐ) | கிரயம் ரூபா 1,329,500 ஆன மோடார் வண்டி மற்றும் மாட்டு வண்டி அகற்றபட்டமை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் அகற்றிய சொத்துக்கின் கிரயத்தை சொத்துக்கணக்கிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 ஆண்டு இறுதிக்கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஒ) | மீளாய்வாண்டிற்குரிய வருமானம் மீள் செலுத்தல் ரூபா 1,058,820 திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக்கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஓ) | மீளாய்வாண்டினுள் கிடைத்த ரூபா 1,037,407 ஆன வருமானம், காசேட்டில் இரண்டு முறை குறிக்கப்பட்டிருந்தது. | அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (க) | மீளாய்வாண்டிற்குரிய கடை வாடகை ரூபா 943,321 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | மீளாய்வாண்டு இறுதியில் கலி பவுசர் கடன்தீர் நிதியக் கணக்கின் மீதி ரூபா 621,372 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்களிற்குரிய சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (கி) | திட்டமிடல் குழு கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 330,500 இனை செயற்பாட்டு செலவாக கணக்கீடு செய்திருக்காததுடன், அது காசேட்டில் இரண்டு முறை குறிக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய செலவை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (கீ) | ஆண்டிற்குரிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணக்கீடு செய்கையில் செலவு கட்டுப்பாட்டுக் கணக்கு ரூபா 108,863 குறைத்தும் கையிறுப்பு பண்டக் கணக்கு ரூபா 108,863 மிகையாகவும் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (கு) | மீளாய்வாண்டு இறுதியில் 12 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்று மிதிகள் மற்றும் உபயோகப் பதிவேட்டு மீதி உறுதிப்படுத்தல்கள் பிரகார மீதிகளிற்கிடையில் கூட்டுத் தொகை ரூபா 44,310,830 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளுடன் இணங்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (கூ) | சபையின் 04 வங்கிக் கணக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் சாராம்ச காசேடு பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 21,986,287 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் பெறுமதிகள் உபயோகப் பதிவேடுகளுடன் இணங்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இலக்கம் 19 கொண்ட மாநகர சபை கட்டளைச் சட்டம்** | | | |
| (i) | 42(அ) பிரிவு | அனுமதியற்ற 14 நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாநகர சபை கட்டளைச் சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவது தொடர்பாக சட்ட அலுவலரிற்கு முன்வைத்து பெற்றுக் கொண்ட ஆலோசனை பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் அவ் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 127(1) பிரிவு மற்றும் (3) பிரிவு | 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட 122 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களில் 117 இற்கு இணக்கப்பாட்டு சான்றிதழ் விநியோகிக்கப்பட்டு இருக்கவில்லை | தொடர்புடைய ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணக்கப்பாட்டு சான்றிதழ் விநியோகிக்கப்படுவது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு இணங்க நிரமாணம் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே எனவும் அனுமதிப்பத்திர காலத்தை நீடித்தல் மற்றும் இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்வது தொடர்பில் நுகர்வோர்களிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1978 இலக்கம் 01 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 10(5) மற்றும் 10(6) பிரிவு | ஏற்புடைய அனுமதப்பத்திர காலம் முடிவடைந்துள்ள போதும் மீள் கால நீடிப்பு செய்யாத 109 அனுமதிப்பத்திரங்களிற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்புடைய ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதப்பத்திர காலத்தை நீடிப்புச் செய்து கொள்ள அனுமதிப்பத்திரதாரரிற்கு அறிவிக்க நடவக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | 2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய காலங்கடந்த வைப்பு ரூபா 420,000 தொடர்பில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிதிப் பிரமாணம் பிரகாரம் எதர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| **(ஈ)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 4.3 பந்தி | தகைமையான இயந்திர பொறியியலாளரின் அறிக்கையின்றி மீளாய்வாண்டில் 04 வாகனங்கள் ரூபா 804,816 செலவில் திருத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினால் வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 ஆண்டிற்காக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (உ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை. | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய் 2018/இ-உள்ளூராட்சி 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 120,052,443 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 68,672,792 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 30,000,000 | 28,007,750 | 29,076,630 | 29,364,290 | 30,500,000 | 29,175,731 | 26,021,465 | 28,962,158 |
| (ii) | வாடகை | 84,047,258 | 72,078,670 | 72,505,841 | 37,220,063 | 68,398,946 | 66,152,480 | 63,173,522 | 28,362,641 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,426,500 | 4,981,422 | 4,981,463 | - | 4,723,000 | 3,073,149 | 3,073,149 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 103,662,800 | 136,148,114 | 135,511,919 | 68,416,387 | 77,862,450 | 78,936,190 | 47,332,292 | 37,628,458 |
| | | 223,136,558 | 241,215,956 | 242,075,853 | 135,000,740 | 181,484,396 | 177,337,550 | 139,600,428 | 94,953,257 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| (i) | 2019 திசெம்பர் 31 திகதி நிலுவை வீதவரி மீதி ரூபா 28,647,204 ஆனதுடன், நிலுவை பணம் அறவிடலில் சபையின் செயற்பாடு மிகப் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. அதே போன்று நிலுவை வீதவரி மீதி பற்றிய | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | வீதவரி பட்டியல் பிரிவில் பயன்படுத்தப்படும் 20 வருடங்கள் பழமையான மென் பொருளின் மூலம் வீதவரி நிலுவை மீதிகளின் காலப்பகுப்பாய்வு ஒன்றை பெற்றுக் கொள்ளும் இயலுமை |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுப்பாய்வு ஒன்றும் சமர்பிக்கப்படவில்லை. | | இல்லை என அறிவிக்கிறேன். |
| (ii) | வீதவரி அறவிட அனைத்து நிலையான சொத்துக்களும் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிட வேண்டிய போதும், 1997 ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. 2005 ஆண்டு மேற்கொண்ட மதிப்பீட்டை செயற்படுத்துவதை மகா சபை மற்றும் நிதி செயற்குழு இரண்டு சந்தர்ப்பங்களில் தாமதித்திருந்தன. | வீதவரி சொத்துக்கள் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2018 ஆண்டு மத்தியிலிருந்து மதிப்பீட்டு திணைக்களத்துடன் மேற்கொண்ட சில கலந்துரையாடல்களின் பின்னர் 2019 ஜுன் 10 திகதி முதல் புதிய மதிப்பீட்டை மதிப்பீட்டு திணைக்களம் ஆரம்பித்துள்ளதாகவும், மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் புதிய வீதவரி கட்டணம் அறவிடும் இயலுமை காணப்படுவதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ)** | **ஏனைய வரி** | | |
| | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு பாதீட்டின் மூலம் குப்பை வரி வருமானம் முறையே ரூபா 1,000,000 மற்றும் 2,500,000 என மதிப்பிட்டிருந்த போதும், குப்பை வரி அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப விதியை விதித்து வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | குப்பை வரிக்கான உப விதி தயாரிக்கப்பட்டு சபரகமுவ மாகாண சபையிற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதும், அது கலைக்கப்பட்டதால் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுச் சந்தை 30 பக்கி கடைகளிலிருந்து 2019 திசெம்பர் 31 திகதியளவில் அறவிட வேண்டிய நிலுவை கட்டணம் ரூபா 1,948,215 ஆனதுடன், அதில் ரூபா 1,049,375 தொகை ஆண்டு 01 இற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரியதாகும். 03 மாதங்களை விஞ்சி வாடகை நிலுவையாக உள்ள 20 பக்கி கடைகளை முத்திரையிட தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அத்தீர்மானத்தை செயற்படுத்தியருக்கவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் செயற்பட்டு நிலுவை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர வேலைகள் திணைக்களத்திற்கு இக்கடைகளை முத்திரையிட தேவையான வலை கவசங்களை தயாரித்து தருமாறு அறிவித்துள்ளதாகவும் முன்நடடிக்கைகளை விரைவில் செய்வதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2015 ஆண்டில் குத்தகை வழங்கியுள்ள தெமுவாவன மாணிக்க வியாபார கட்டிடத் தொகுதியில் கடையறைகளிலிருந்து பண உதவி ரூபா 11,235,475 மற்றும் கடைவாடகை ரூபா 1,010,000 நிலுவையானதன் மீது வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானித்திருந்த போதும், அதனை செய்திருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட தேவையான சட்ட நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும். | சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சட்ட அலுவலரிற்கு கோவைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்

#### சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 15 நிறுவனங்கள் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ளமை மற்றும் காலாவதியான 44 அனுமதிபத்திரங்களை புதுப்பிக்காமை தொடர்பில் நடவடிக்கை எடுக்காததனால் ரூபா 268,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய எல்லா நிறுவனங்களுக்கும் முறையாக அனுமதிபத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கைத்தொழிலிற்காக சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக் கொள்ளுமாறு தற்போது எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் இனங்காணும் ஏனைய கைத்தொழில்களிற்காகவும் அறிவித்து பதில் அளிக்காத கைத்தொழிலிற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரத்தினபுரி நகர அமைந்துள்ள பிரதான பேருந்து தரிப்பிடத்திற்கு பேருந்து உட்பிரவேசிக்கும் கட்டணமாக 2009 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை காலப்பகுதியிற்கு சபரகமுவ பேரூந்து நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,960,100 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அத் அதாகையை அறவிட மாகாண சபை ஊடாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 32,450,189 ஆனது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டினுள் முத்திரைக் கட்டணம் ரூபா 31,010,420 கிடைத்துள்ளதாக அறிவிக்கிறேன்.. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மாநகர சபை கட்டளைக் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்ட வேண்டும். | 2020 ஆண்டிற்கான தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

(ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 வருடாந்த பாதீட்டில் நலன்புரி சேவைகள் வேலைத்திட்டத்தின் கீழ் 05 பல்வேறு வேலைத்திட்டங்களிற்காக ரூபா 2,210,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும், அவ் வேலைத்திட்டங்கள் எதனையும் செயற்படுத்தியிருக்கவில்லை. | பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை வினைத்திறனுடன் செயற்படுத்த வேண்டும். | ஒதுக்கீடு செலவிடப்படாத போதும், உயர் பிரசைகள் வேலைத் திட்டம் மற்றும் சமுதாய அபிவிருத்தி சங்க வேலைத் திட்டங்கள் சில நடைமுறைப்படுத்தப்பட்டன. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 திசம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் பொது சுகாதாரப் பிரிவினூடாக 2017 ஆண்டு மேற்கொண்டிருந்த சுகாதார மற்றும் துப்பரவு தர ஆய்வின் போது | பாதீட்டில் உள்ளடங்கும் செயற்பாடுகளிற்கு ஒதுக்கீடு ஏற்பாடு | 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் ஒதுக்கீடு இருக்காததனால் கழிவரை குந்து பான் வழங்கல் |

| | | | |
|---|---|---|---|
| | மாநகர சபை எல்லையினுள் 155 குடும்ப அலகுகளிற்கு துப்பரவான கழிவறை வசதிகள் இல்லை என இனங்கண்டிருந்த போதும் மாநகர சபை கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு அமைய தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செய்து அதனை பயனுள்ளதாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்பாக திட்டம் தயாரிக்காததுடன், 2020 ஆண்டு பாதீட்டின் மூலம் அதற்காக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதால் உரிய செயன் முறைமையொன்றை தயாரித்து அவ் ஊக்குவிப்பை வழங்க நடவடிக்கை எடுப்பதாக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கழி பவுசர் 2016 ஆகஸ்ட் மாதம் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், திருத்த வேலைக்காக ரூபா 151,610 செலவிடப்பட்டிருந்தது. காப்புறுதிப் பாதுகாப்பு மூலம் ரூபா 64,891 மாத்திரம் மீள்நிரப்பப்பட்டிருந்ததுடன், விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப விசாரணையொன்றை மேற்கொண்டு பொறுப்புதார தரப்பினரை இனங்கண்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொறுப்புதார தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (இ) | நகர தலைவரின் உத்தியோகபூர்வ வண்டி 2018 ஜூலை 26 திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன், அதன் திருத்த வேலைகளிற்கு ரூபா 202,388 செலவிடப்பட்டிருந்த போதும், காப்புறுதிப் பாதுகாப்பு மூலம் ரூபா 81,614 மாத்திரம் மீள்நிரப்பப்பட்டிருந்ததுடன், விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப விசாரணையொன்றை மேற்கொண்டு பொறுப்புதார தரப்பினரை இனங்கண்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொறுப்புதார தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையினால் செயற்பாடுத்தும் 07 நீர் கருத்திட்டங்களின் 989 நீர் பாவனையாளர்களிடமிருந்து கட்டணம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததால் ரூபா 1,800,000 ஆன வருடாந்த வருமானமொன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. 2012 நவம்பர் 29 திகதிய மற்றும் 2018 மே 14 திகதிய சபை தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து நீர் கருத்திட்டங்களிற்காகவும் நீர் மாணி பொருத்த வேண்டுமென முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதே | நீர் மாணிகளை பொருத்தி கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நீர் மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

போன்று 2018 செப்டம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 290,000 ஆன 200 நீர் மாணிகள் 2020 ஜனவரி வரையும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததுடன் 2019 மார்ச் 04 திகதியுடன் அதன் செல்லுபடியான காலம் முடிவடைந்திருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை சட்டத்தினால் அல்லது ஏனைய சுற்றறிக்கை ஒன்றினால மக்கள் பிரதி நிதிகளுக்கு கடன் முற்பணம் வழங்க அதிகாரமொன்று வழங்கப்பட்டிருக்காத போது 19 மக்கள் பிரதி நிதிகளுக்கு இடர் கடனாக ரூபா 7,939,000 தொகை 2018 மற்றும் 2019 ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் அவற்றில் ரூபா 5,630,663 அறவிட வேண்டியதாக இருந்தது. | மக்கள் பிரதி நிதிகளுக்கு கடன் முற்பணம் வழங்க எழுத்து மூல சட்டமொன்றிக் கீழி ஏற்பாடு வழங்கப்படவில்லை. | மக்கள் பிரதி நிதிகளுக்கு கடன் முற்பணம் வழங்க 2019 ஜனவரி 08 திகதிய மகா சபை கூட்டத்தில் இலக்கம் 06:07 கொண்ட உடன்பாட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் பழுபார்த்தல் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டு 01 முதல் ஆண்டு 06 வரையான காலமாக செலுத்தப்படாத 04 வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பராமரிப்பு மற்றும் பழுபார்த்தல்களை நாளாதுவரையாக மேற்கொள்ள வேண்டும். | 02 வாகனங்கள் பழுதுபாக்கப்படவுள்ளதாகவும் எஞ்சிய இரண்டு வாகனங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் தீர்மானம் எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

#### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதிவுரிமையில்லாது சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 02 ஆனது. | பதிவுரிமையில்லாது வாகனங்களை சபையின் பெயரில் சுவீகரித்துக் கொள்ள வேண்டும். | இவ் வாகனங்களை சுவீகரிக்க உரிய படிவங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், சுவீகரிக்கும் நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வதாகவும் அறிவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திரைப்பட மாளிகை ஒப்பந்தக்காரரிடமிருந்து 2001 மே 01 திகதி முதல் 2010 ஏப்ரல் வரை காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 1,953,000 வை அறவிட அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க 2020 ஜுன் வரை செயற்பட்டிருக்காததுடன் 2017 செப்டம்பர் முதல் 2019 திசெம்பர் வரை காலத்திற்குரியாக இரண்டு குத்தகைக்காரரிடமிருந்து அறிவிட வேண்டிய ரூபா 1,627,570 வை அறவிடவும் சபைக்கு இயலாதிருந்தது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்ட நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உத்தேச திட்டத்தின் கீழ் ரூபா 54,566,853 ஆன கடன் கிடைத்திருந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபை இரத்தினபுரி மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய விடுதி வாடகையில் 50 சதவீதத்தை குறித்த கடன் தொகைக்கு பதிலிடுவதாக அதன் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் அறிவித்திருந்த போதும், குறைக்கப்பட்ட கடன் தவனை அளவை உருதி செய்து கொள்ளாததால் மீளாய்வாண்டு வரையும் மொத்த கடன் தொகையும் பொருப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | குறித்த பிரச்சினைகளை தீர்துக்கொண்டு நிதிக் கூற்றுக்களை சரி செய்ய வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து இதனுடன் தொடர்புடைய தகவல்களை உருதி செய்து கொண்டதன் பின்னர் ஒழுங்காக தகவல்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ)(i) | பொம்கௌய நகர வனப்பூங்கா போதியளவு பராமரிக்கப்படாததால் நீர் சுத்திகரிப்பான் செயலிழந்து நீர் தாங்கியும் அசுத்தமடைந்து எவரும் பயன்படுத்தாத நிலைக்கு ஆகியிருந்தது. ஆரம்பத்தில் 56 ஏக்கர் அளவான காணியுடன் கூடிய இவ் வனப்பூங்கா அனுமதியற்ற நிர்மாணம், இடரிற்குறப்பட்டவர்களை குடியமர்த்தல் மற்றும் பாரிய நீர் கருத்திட்டங்களிற்கு இடவசதி வழங்கியமையால் தற்போதளவில் 35 ஏக்கர்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. வனப்பீங்காவின் பாதுகாப்பிற்காக 2012 மற்றும் 2015 ஆண்டுகளில் உத்தேசம் முன்வைக்கப்பட்ட போதும், அத் திட்டங்கள் எதுவும் 2019 இறுதி வரையும் செயற்படுத்த மாநகர சபைக்கு இயலாதிருந்தது. | நகர வனப்பூங்காவின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | தேவையான ஒதுக்கீடு கிடைக்காததால் 2012 மற்றும் 2015 ஆண்டுகளில் உத்தேசங்களை செயற்படுத்த முடியவில்லை எனவும், தற்போது நகர சபை அதிகார எல்லையில் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற பாரிய பொலிஸ் வேலைத் திட்டத்தின் கீழ் பெம்பகளேயின் பாதுகாப்பு உட்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ)(ii) | எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடாது பொம்பகளேய வனக்காப்பில் நீர் உத்தேச திட்டமொன்றிற்கு 2014 ஆண்டு வழங்கப்பட்டிருந்த 02 ஏக்கர் 28.81 பர்சஸ் இற்காக மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் 30 ஆண்டுகளிற்கு ரூபா 34,009,564 குத்தகை பணம் செலுத்துமாறு 2017 ஆண்டு நீர் கருத்திட்ட பணிப்பாளரிற்கு அறிவித்திருந்த போதும், நீர் உத்தேச திட்டத்திற்குரிய காணி 1978 ஜுன் 15 திகதிய வர்தமாணி மூலம் தேசிய நீரி வழங்கல் மற்றும் வடிகால் சபையிற்கு சுய ஒப்படைப்பு உத்தேசத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவித்து குத்ததை பணம் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. குறித்த விடயம் தொடர்பாக சபை முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | வரித்தமாணி அறிவித்தல் தொடர்பாக பரிசோதித்து சபைக்கு அறவிட வேண்டிய வருமானம் இருப்பின் அதனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வரித்தமாணி அறிவித்தலை தேசிய ஆவணக்காப்பு திணைக்களத்திடமிருந்து கோரியுள்ள போதும் அது தொடர்பாக இது வரை பதில் கிடைக்கவில்லை என அறிவிக்கிறேன். |
| (ஈ) | மட்டுப்படுத்தப்பட்ட இரத்தினபுரி மாவட்ட கூட்டுறவு நெசவுத் தொழில் சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான 35.5 பர்சஸ் இல் 4.95 பர்சஸ் அளவு 2009 ஆண்டில் மீண்டும் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீதி காணியினை சட்டபூர்வமாக சுவீகரிக்க மீளாய்வாண்டு இறுதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | எஞ்சிய காணிப் பகுதியை சுவீகரிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் காணிப் பகுதியை அளவையிட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |
| (உ) | சபைக்கு சொந்தமான இரத்தினபுரி, பொம்பகெளே, 05 ஏக்கர் காணியை மற்றும் அங்குள்ள கட்டிடத்தை, 02 டெனிஸ் மைதாகம் மற்றும் பெட்மின்டன் மைதானத்தை ரூபா 350 ஆன வருடாந்த குத்தகை வாடகைக்கு 33 வருட காலத்திற்கு இரத்தினபுரி சட்டத்தரனிகள் சங்கத்திற்கு நீண்ட கால குத்தகை வழங்கப்பட்டிருந்த கோது, குத்தகை வாடகை பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று 05 வருடங்களுக்கு ஒரு முறை அதன் மதிபீட்டு குத்தகை வாடகையை திருத்தியிருக்கவில்லை. 33 வருடங்களிற்கான குறித்த மொத்த குத்தகை வாடகையாக ரூபா 11,550 உரிய தரப்பினரால் 2006 திசெம்பர் 08 திகதி சபைக்கு செலுத்தியிருந்த போதும், நகர முதல்வரால் பல காரணங்களை குறிப்பிட்டு காசோலை திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. என்னும் 2019 திசெம்பர் வரையும் குறித்த உடன்டிக்கையை திருத்த அல்லது குத்தகை பணம் அறவிட ஏனும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குத்தகை உடன்படிக்கை பிரகாரம் கட்டிடத்தை வாடகைக்கி வழங்கி சங்கம் உழைக்கும் வருமானத்தில் 2/3 பங்கை | பொறுப்புதாரர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஒப்பந்தத்தை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டத்தரனிகள் சங்கத்திடம் கணக்கறிக்கையை கோரியுள்ளதுடன், அவ்வறிக்கையை பெற்றுக் கொண்டதன் பின்னர் பணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு செலுத்த வேண்டிய போதும், 19 வருட குத்தகை காலத்தினுள் எவ்வித பணமும் சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | இரத்தினபுரி, தெமுவாவத, நகர சபை பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு மாடி கட்டிடத்திற்காக கட்டிட விண்ணப்பம் 2012 ஜுலை 17 ஆம் திகதி சபைக்கு கிடைத்திருந்த போதிலும், கட்டிடம் நியம அளவுத்திட்டங்களிற்கு இணங்காததால் திட்டத்தை அங்கீகரிக்க முடியாமலிருந்தது. மீளாய்வாண்டு இறுதி வரையும் குறித்த கட்டிடத்தை அகற்ற சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் துரிதமாக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |